

# முஸ்லிம் பெண்மணிகளின் முன்மாதிரி சீர்திருத்தம்





# முஸ்லிம் பெண்மணிகளின் முன்மாதிரி சீர்திருத்தம்

Title:

முஸ்லிம் பெண்மணிகளின்
முன்மாதிரி சீர்திருத்தம்

Muslim PenmanikhalinMunmadiri valkai
(Translated in Tamil)

Original:
Moulana Moulavi Peer Dulfikar Hazarath Qibla

Translation:
Moulana Muhammed Ibrahim Nizaami Maqdoomi,
Imam, Noorul Islam Masjid, Salem.

Published by:
UNWO Publishers
United Welfare Organisation,
M.V.Badran Street, Periamet
Chennai-600003

Printing
SKS Printers,
Mobile : 9551944709

# மதிப்புரை

அல்லாஹ்வின் கிருபையால், சர்வதேச அளவில் மாபெரும் சீர்திருத்த பணி செய்து வரும் பெரியார்களில் ஹள்ரத் மௌலானா பீர் துல்பிகார் அஹமத் சாஹிப் தாமத் பரகாதுஹும் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லப் பட வேண்டியவர்கள்.

பாவத்தின் காரணத்தால் துண்பத்தில் துவண்ட மனிதர்கள் ஹள்ரத் அவர்களின் சொற்பொழிவால் தனக்குள் திருத்தத்தை ஏற்படுத்தி, இன்பமான, தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் ஏராளம். பொதுமக்கள் மட்டுமின்றி உலமாக்கள் மற்றும் ஸாலிஹீன்கள் என அனைத்துத் தரப்பினரும் ஹள்ரத் அவர்கள் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

இன்று சமுதாயச் சந்தையில் இஸ்லாமியப் பெண் மிகவும் சீரழிக்கப் படுகின்றாள். காதல் என்ற மாயையில் பல இஸ்லாமியப் பெண்களின் கற்புகள் கபளீகரம் செய்யப்படுவதோடு மட்டுமலில்லாமல், விலை மதிக்கவே முடியாத ஈமானையும் பிடுங்கப்பட்டு சுடுகாட்டுக்குத் தள்ளப் படும் சூழ்நிலையையும் கண்கூடாக கண்டு வருகின்றோம். ஏற்கனவே நல்லநல்ல குணம் உள்ள வாலிபப் பெண்கள் எல்லாம் பெற்றோர்களின் சீரிய வளர்ப்பும், முறையான கவனிப்பும் இல்லாததால் தான் இந்நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள் என்பதே உண்மை.உலகக் கல்வி என்ற போதையில் மயங்கிக் கிடக்கும் எத்தனையோ பெற்றோர்கள் தங்களின் பெண் பிள்ளைகள் கையை விட்டும் போனதற்குப் பின்னால் தான் உணர்வு நிலைக்கே வருகின்றார்கள்.

எனவே ஒரு பெண்ணுக்கு உலகக் கல்வி இருப்பினும், இல்லாவிடினும் மார்க்கக் கல்வியும், அதில் பிடிப்பும் இருந்தால் மகள், சகோதரி, மனைவி, தாய் என்ற பரிணாமங்களில் தன்னுடைய சீர்திருத்தத்தோடு மட்டுமில்லாமல், தன் சார்ந்த குடும்ப ஆண்களையும் எவ்வாறல்லாம் சீர்திருத்த முடியும் என்பதை வரலாற்று நிகழ்வுகளோடு ஹள்ரத் அவர்கள் நிகழ்த்திய உர்தூ பயானின் தமிழாக்கம் தான் இந்நூலாகும். இதை முஹம்மது இப்ராஹீம் மிஸ்பாஹி சேலம் அவர்கள் மொழி பெயர்த்து-

ள்ளார்கள். அல்லாஹ் இந்நூலின் மூலமாக சமுதாயத்தில், குறிப்பாக, பெண்களிடத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவானாக!

– ஷகீல் அஹ்மத் நக்ஷ்பந்தி
பெங்களூர்.

# உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 6 |
| 2. | பெண்களும் பொறுப்பாளர்களே! | 7 |
| 3. | தாயின் மீதான குழந்தைகளின் பிரியம் | 9 |
| 4. | வளர்ப்போரின் மீதான பாசம் | 10 |
| 5. | விலைமதிக்க முடியாத தாயின் கண்ணீர் | 11 |
| 6. | தாயால் முஸ்லிமான அனஸ் (ரலி) | 12 |
| 7. | போர் வேட்கையை தூண்டிய தாய் | 13 |
| 8. | உங்கள் "ஜனாஸா" க்களை காண வருவேன் | 13 |
| 9. | அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி) யை உருவாக்கிய தாய் | 14 |
| 10. | ஆச்சரியமான துஆ | 15 |
| 11. | கருத்து வேறுபாடுகளை தவிர்க்க வேண்டும் | 16 |
| 12. | கணவனது மனதில் மனைவியின் அந்தஸ்து | 17 |
| 13. | அபூதல்ஹா (ரலி) யை முஸ்லிமாக்கிய பெண் | 19 |
| 14. | ஹள்ரத் இக்ரிமா (ரலி) யை முஸ்லிமாக்கிய மனைவி | 21 |
| 15. | யர்மூக் போரில் பெண்களின் சேவை | 22 |
| 16. | சகோதரர்களின் பார்வையில் சகோதரிகளின் மதிப்பு | 25 |
| 17. | பால்குடி சகோதரிக்கு மரியாதை | 25 |
| 18. | சகோதரர்களுக்கு நல்லுபதேசம் செய்ததன் விளைவு | 26 |
| 19. | தந்தையின் பார்வையில் மகளின் மதிப்பு | 27 |
| 20. | பெண்மக்கள் மீதான கடமை | 30 |
| 21. | சில நிமிடம் சிந்திக்க | 30 |
| 22. | இறுதியாக ஒரு வார்த்தை | 34 |

# முன்னுரை

“ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே” – என்றொரு பழமொழி வழக்கில் இருந்து வருகிறது. இதை நேரடியாக பார்த்தால் பெண்ணியம் குறித்து தவறாக சித்தரிப்பதாக தெரியும். இதனைக் கீழ்கண்டவாறும் பொருள் கொள்ளலாம். தீனை ஓரளவு கற்றறிந்த இஸ்லாமிய பெண் அவள் மார்க்கப்பற்றுள்ளவளாக இருந்துஅவள் முயற்சித்தால்.

(நன்மைகள்) ஆவதும் பெண்ணாலே!

(தீமைகள்) அழிவதும் பெண்ணாலே!

– என்னும் புதுமொழியாக

மாற்றிட இயலும். இதற்குரிய ஆற்றலை அல்லாஹ் பெண் இனத்திற்கு வழங்கியுள்ளான். இதனைப் புரிந்து கொண்டு முறைப்படி செயல்பட்டால் சமூக மறுமலர்ச்சியில் சாதனைகளை நிகழ்த்தலாம். ஏனெனில்,

தாயின் கண்ணீருக்கு கலங்காத மகனும் இல்லை.

மனைவியின் அன்பான உபசரிப்பில், மயங்காத கணவனும் இல்லை.

சகோதரியின் அரவணைப்பில் மனம் இரங்காத சகோதரனும் இல்லை.

மகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு அடிபணியாத தந்தையும் இல்லை.

இத்தகு அறிய வாய்ப்பைப் பெறும் ஒரு பெண் தன் பெற்றோர், சகோதரன், கணவன், மகன் இவர்களை நல்வழிப்படுத்த முயற்சித்தால் தன்னளவில் ஒரு இஸ்லாமிய குடும்பத்தையும் பொது நிலையில் உயரிய சமுதாயத்தையும் உருவாக்கித்தர முடியும். இதனை மையமாக வைத்து

**மௌலானா துல்ஃபிகார் சாஹிப் நக்ஷபந்தி (தாமத்) பரகாதுஹூம்** அவர்கள் பாகிஸ்தானில் உள்ள நிஸ்வான் மதரஸாவின் பட்டமளிப்பு விழா ஒன்றில்,பட்டம் பெற்ற ஆலிமாக்களுக்கும், கூடியிருந்த பெண்களுக்கும் உருதுமொழியில் ஆற்றிய உபதேசம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இஸ்லாமிய பெண்கள் அனைவரும் இதனைப் படித்து பயனடைய அல்லாஹ் தவ்பீக் செய்வானாக ஆமீன்!

## 2. பெண்களும் பொறுப்பாளர்களே!

ஒவ்வொரு முஸ்லிமும் தான் கற்றறிந்த தீனின்படி அமல் செய்வது அவசியம் என்பது போலவே அதை பிறருக்கு எடுத்துச் சொல்வதும் கடமை என்பதை குர்ஆனின் பல்வேறு வசனங்கள் தெளிவு படுத்துகின்றன. "பிறருக்கு எடுத்துரைத்தல்" என்பதில் நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல் இரண்டும் அடங்கும்.

நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் பணியில் ஆண்கள்தான் பெரும் பங்காற்ற முடியும் என்றாலும் பெண்களும் இப்பணியில் ஆண்களுக்கு வலது கரமாகவும், உதவியாளராகவும் திகழ வேண்டும் என்று பின்வரும் குர்ஆன் வசனம் பெண்களுக்கு அறிவுறுத்துகிறது.

والمؤمنون والمؤمنات بعضهم اولياء بعض يأمرون بالمعروف وينهون عن المنكر

முஃமினான ஆண்களும், பெண்களும் ஒருவர், மற்றவருக்கு உதவியாளராக இருந்து நன்மையை ஏவுவர், தீமையை தடுப்பர்.

(அல்குர்ஆன் : 9-17)

பெண் வெளியில் சென்று தீனை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை அவள் மீது இல்லை என்றாலும், தன்னைச் சூழ உள்ள குடும்ப வட்டத்தில் மஹ்ரமான ஆண்களுக்கும்,பெண்களுக்கும், நன்மைகளை எடுத்துச் சொல்லி தீமைகளை சுட்டிக் காட்டி திருத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் அவர்களுக்கு உண்டு என்றும், மறுமையில் ஒரு பெண் அதுகுறித்தும் விசாரிக்கப்படுவாள் என்றும் நபிகளார் நவின்றுள்ளார்கள்.

كلكم راع وكلكم مسئول عن رعيته والمرأة راعية على اهل بيت زوجها .

உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். மறுமையில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பொறுப்புகளை பற்றி கேட்கப்படுவீர்கள். பெண்தன் கணவன் மற்றும் அவளது குடும்பத்தினர், குழந்தைகள் பற்றியும் விசாரிக்கப்படுவாள்.

(புகாரி: 2409)

என்று பெண்ணை தனித்து குறிப்பிட்டு ஹதீஸில் கூறப்பட்டுள்ளதால் பெண்கள் இப்பொறுப்பு விஷயத்தில் அதிக கவனம் செலுத்த கடமைப் பட்டுள்ளவர்களாக இருக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக தீனை ஓரளவு கற்றறிந்த ஆலிமாக்கள், முபல்லிகாக்கள் தன்னளவில் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக் கொள்வதுடன் மற்றவர்களையும் அல்லாஹ்வின் பக்கம் சேர்த்து வைப்பதையும் அவனது அன்பைப் பெற்றவர்களாக ஆக்குவதையும் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் தனது குடும்ப தொடர்பாளர்களான கணவன், சகோதரன், தந்தை, மகன் - இவர்கள் போன்ற மஹ்ரமான ஆண்களை நல்வழிப் படுத்துவதில் பெண்கள பெரும் அளவில் பங்காற்றிட முடியும். இன்றைய சூழ்நிலையில் இவ்வாறு செயல்பட்டாக வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

காலை கண்விழித்தது முதல் இரவு படுக்கச் செல்லும் வரை அன்றாட வீட்டு வேலைகளையே சரியாக எங்களால் செய்ய முடிவதில்லை. இதில் இது போன்ற பணிகளில் அக்கறை எடுத்துக் கொள்வது எங்ஙனம் சாத்தியம்? என்று கூட சில பெண்கள் யோசிக்கலாம்.

இதுவொன்றும் முடியாத காரியமல்ல. காரணம், தன் பிள்ளைகளின் எதிர்கால உலகியல் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்று விரும்பும் தாய் தன் பிள்ளைகளுக்காக எந்த அளவு தியாகங்களை செய்ய துணிந்து விடுகிறாள். எவ்வளவு சிரமங்களாயினும் அதை ஏற்க தயாராகிவிடுகிறாள்.

இதற்கெல்லாம் காரணம் தன் மரணத்திற்கு பின் தன் பிள்ளைகள் என்ன ஆவார்களோ? எப்படி வழ்வார்களோ? என்று சிந்திப்பதின் விளைவே ஆகும். இந்தக்கவலையின் எல்லையை அத்துடன் சுருக்கிக் கொள்ளாமல் என் மரணத்திற்கு பின் அவர்களது மறுமை வாழ்வு என்ன ஆகுமோ? என்று மறுமை சிந்தனையையும் ஒரு பெண் தன்னுள் கொண்டு வந்தால் தன்னையும், தன்னை சுற்றி உள்ளவர்களையும் நல்வழிப்படுத்த அக்கறையுடன் முயற்சிப்பாள்.

அல்லாஹ் பெண்களுக்கு நான்கு பருவங்களையும், பரிமாணங்களையும் வடிவமைத்து வைத்துள்ளான். அவை 1. மகள், 2. சகோதரி, 3. மனைவி, 4. தாய் - இந்நான்கு வடிவத்திலும் ஒரு பெண் தான் நினைத்த காரியத்தை சாதிக்கும் பேராற்றலை அல்லாஹ் இயல்பாகவே பெண்களில் அமைத்து வைத்துள்ளான். ஆனால், பெரும்பாலும் பெண்கள் இவ்வாற்றலை தன் அற்ப சுகபோகங்களுக்காகவும் உலக வாழ்வுக்காக மட்டும் பயன்படுத்தி மறுமையின் பலனையும் அதன் உரிய வாழ்வையும் இழந்து போகிறார்கள் என்பதே நிதர்சனம்.

தாயின் கண்ணீர், மனைவியன் உபசரிப்பு, சகோதரியின் அரவனைப்பு, மகளின் மீதுள்ள பரிவு - இந்நான்கு சந்தர்ப்பங்களிலும் ஒரு ஆண் எவ்வளவு தான் கல்மனம் கொண்டவனாயினும் மனமிறங்கியும் சில சமயங்களில் மனம் கலங்கியும் விடுகிறான். அப்பெண்களின் பேச்சைக் கேட்கிறான். ஏற்கவும் செய்கிறான். தன் கருத்தை தள்ளி வைக்கிறான். இதுவே அதிகபட்ச ஆண்களின் வாழ்வில் நடைபெறும் நிதர்சன உணமை.

இத்தகு அறிய வாய்ப்பை பெற்றிருக்கும் ஒரு பெண், இவ்வாய்ப்பை ஏன் தீனுக்கு சாதமாகப் பயன்படுத்தக் கூடாது? என்பதே நம் கேள்வி. இஸ்லாமியம் சார்ந்த வாழ்வியலையும், அதன் உயரிய கலாச்சாரத்தையும் விட்டு நெறிதவற நினைக்கும் தன் கணவனை, மகனை, சகோதரனை திருத்த தான் பெற்றிருக்கும் இந்த ஆற்றலை ஒரு பெண் பயன்படுத்தினால் நல்லதொரு தீனுடைய சூழலை பெண் தன் குடும்ப வட்டத்தில் உருவாக்கிட முடியும் என்பதே நாம் சொல்லப் போகும் விஷயங்களின் சுருக்கமாகும். இதை விரிவாகக் கூறுகிறேன் கேளுங்கள்.

## 3. தாயின் மீதான குழந்தைகளின் பிரியம்:

பொதுவாகவே குழந்தைகள் தன்னுடன் மிகவும் நெருக்கமாக இருப்பவர்களுடனும், தொடர்புடையவர்களாக இருப்பவர்களின் மீதும் மிக்க பாசத்துடன் அணுகுகிறார்கள். பெரும்பாலும் குழந்தைகளுடன்

அதிக நேரம் செலவழிப்பவள் தாய் (தந்தையின் வெளி உலக சம்பாத்திய தொடர்புகள் குழந்தைகளின் நெருக்கத்தை சற்று தூரப்படுத்தி விடுகிறது.) எனவே,குழந்தைகளின் உள்ளத்தில் தந்தையின் பிரியத்தை விட தாயின் பிரியமே மிகைத்து நிற்பதை நாம் காண்கிறோம்.

மிருகங்களை வளர்க்கும் மனிதர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலர் சிங்கத்தையும், சிலர் யானையையும், சிலர் பாம்பையும் கூட வளர்க்கிறார்கள். இவைகள் மிகவும் அபாயகரமான உயிரினங்கள் தான். இருப்பினும் கூட இந்த உயிரினங்கள் தன்னோடு நெருங்கி இருக்கும் மனிதர்களை தீங்கு செய்யாமல் கவனித்து செயல் படுகிறது.

## 4. வளர்ப்போரின் மீதான பாசம்:

1. "சர்க்கஸ்" காட்சிகளை நாம் பார்த்திருக்கலாம். சிங்கம் வாயைத் திறக்கிறது. அதன் வாய்க்குள் சிறுமி தன் தலையை விட்டு எடுக்கிறாள். ஆனால் சிங்கமோ ஒரு துன்பமும் செய்வதில்லை.

2. "ஜெர்மனியில்" யானையை வளர்க்கும் பத்து மனிதர்கள் பாதையில் வரிசையாக படுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கிடையில் சின்ன சின்ன இடைவெளிகளில் கால் வைத்து யானை கடந்து செல்கிறது. அவர்களில் யார் மீதும் கால் வைக்கவில்லை.

3. பாம்பு எவ்வளவு கொடிய விஷம்? கொண்டதாக இருந்தாலும் கூட தன்னை வளர்க்கும் மனிதனை தீண்டுவதில்லை.

ஐந்தறிவே பெற்ற கொடிய விலங்குகள் கூட தன்னை வளர்ப்பவர்கள் மீது அன்பைப் பரிமாறும் போது ஆறறிவு படைத்த மனிதன் தாயின் அன்புக்கு அடிபணிவான் என்பது கண்கூடு. ஒரு வேளை "நவநாகரீக" கல்வி பயிலும் இன்றைய தலைமுறையினர் சிந்தனை கெட்டு கிடப்பதால் இவர்களுக்கு வேண்டுமானால் தாயின் மதிப்பு புரியாமல் இருக்கலாம். மாறாக ஆரோக்கிய சிந்தனை கொண்ட மனிதனுக்கு தாயின் மீது பிரியம் இருக்கவே செய்யும். இதுவே இயற்கை.

இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

(பெண் மக்கள் தாய்களையே சார்ந்திருப்பார்கள். அவர்களது சொல்லை ஆசைப்படுவார்கள். ஆண்மக்களை விட பெண் மக்கள் தான் தாயின் பக்கம் அதிகம் ஒட்டிக் கொள்வார்கள். தாயின் கருத்தை உடனடியாக ஏற்றுக் கொள்வார்கள்).

## 5. விலைமதிக்க முடியாத தாயின் கண்ணீர்:

உலகத்திலேயே மாபெரும் சக்தி தாயின் கண்களில் வடியும் கண்ணீருக்குத்தான் உண்டு. கூரிய வாட்களால் கூட செய்ய முடியாத வேலையை இந்த கண்ணீர் ஒரு சில நிமிடங்களில் செய்து விடும்.

'எனக்கு திருமண உறவு வேண்டாம்' என்று மறுக்கும் மகளைக் கூட தாய் கவலையோடு கண்ணீர் சிந்தினால் மகளின் உள்ளம் தாயின் கண்ணீரால் கரைந்து விடுகிறது. மகள் தனது வாழ்க்கையின் முடிவை "அம்மா நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படியே நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சொல்லி விடுகிறாள்.

இவ்வாறே மகன் ஒரு காரியத்தில் பிடிவாதம் செய்தால் தாய் அவனுக்கு மென்மையான, வார்த்தைகளில் புரிய வைக்கும் போது, அந்த மெல்லிய வார்த்தைகள் மகனின் உள்ளத்தை திறந்து விடுகிறது. உடனடியாக தாயின் பேச்சை ஏற்க தயாராகிவிடுகின்றான். குழந்தையின் கண் அசைவை கூட நன்கு புரிந்து வைத்திருக்கும் தாய் தன் மக்களை தீனின் பக்கம் அழைப்பது அவள் மீது கடமையல்லவா?

நாம் என்ன செய்யறதுங்க? நாம் சொன்னால் கேட்பதேயில்லை. அவனோடு பேசி உயிரை விட முடியாது என்று கூறும் பெண்கள் சற்று சிந்திக்கட்டும். நம் பிள்ளைகள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்ல வில்லையானால் சில சமயம் பேசாமல் இருக்கிறாள், சில சமயம் சாப்பிடுவதில்லை, சில சமயம் வேறு ஏதேனும் தந்திரங்களை செய்து பள்ளி செல்ல வைக்கிறாள். அவர்கள் ஒப்புக் கொள்ளும் வரை சாக்கு போக்கு முறைகளை கையாள்கிறாள், அற்ப உலக விஷயத்திற்காக இத்தனை திட்டங்களை தீட்டும் இப்பெண் தீனுக்காக இவற்றை ஏன் செயல்படுத்தக் கூடாது? எனவே தாய் தன் மக்களை நல்லவர்களாக்க,

தீன்தாரிகளாக்க எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லம் முயற்சிக்க வேண்டும். இது தாயின் மீதான தார்மீக கடமையாகும்.

## 6. தாயால் முஸ்லிமான அனஸ் (ரலி):

ஹள்ரத் அனஸ் (ரலி) அவர்கள் சின்னஞ்சிறுவராக இருந்த சமயம் அவரது தாய், தந்தை இருவரும் முஸ்லிம் ஆகாமல் இருந்தனர். தந்தை மாலிக் இப்னு நள்ர் பயணத்தில் வெளியே சென்றிருந்த நேரத்தில், தாய் உம்மு ஸுலைம் நபிகளார் உபதேசம் செய்து கொண்டிருந்த சபையில் கலந்து கொள்ள நேர்ந்தது. நபிகளாரின் உபதேசம் தாயின் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தால் உடனடியாக இணைவைத்து வணங்கும் குற்றத்தில் இருந்து தவ்பா செய்தார், கலிமா சொல்லி முஸ்லிமானார்.

பயணத்தில் இருந்து திரும்பிய மாலிக் இப்னு நள்ரிடம் தான் முஸ்லிமான செய்தியை உம்மு ஸுலைம் (ரலி) கூற 'என் அனுமதியின்றி இந்த முடிவுக்கு எப்படி வந்தாய்?' என்று கணவர் மாலிக் கேட்டார்.

அதற்கு உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் தாங்கள் பயணத்தில் இருந்து திரும்பும் காலம் தாமதம் ஆகலாம். அதற்குள் எனக்கு மரணம் வந்தால் நான் இணைவைத்தவளாக மரணிக்கும் நிலை வந்து விடுமோ? என்று அஞ்சினேன். அதனால் உடனடியாக நான் முஸ்லிமானேன் என்று தெரியப்படுத்தினார்கள்.

நீ முஸ்லிம் ஆகிவிட்டாய்? ஆனால் நான் முஸ்லிமாகமாட்டேன் என்று திட்டவட்டமாக கணவர் கூறி விட, சரி என் மகனையாவது முஸ்லிமாக்குவேன் என்று உம்மு ஸுலைம் (ரலி) சூளுரைத்தார்கள்.

சின்னஞ்சிறு அனஸை நோக்கிய பெற்றோர் இருவரும் தன் கருத்திற்கு இழுத்தனர்.

“மகனே! நீ கலிமா சொல்லாதே!” என்று தந்தை கூற, “மகனே! நீ கலிமா சொல்லிவிடு!” என்று தாய் கூற

குழந்தை அனஸ் தந்தையை ஒரு முறையும் பிறகு தாயை ஒரு முறையும் பார்த்தார். சட்டென முடிவு செய்தார். தாயின் அருகில் சென்று

கலிமா சொல்லி முஸ்லிமானார்.

இந்நிகழ்வின் மூலம் தாய் தன் பாசமான குழந்தைகளை தீனின் பக்கம் நளினமான முறையில் அழைக்கும் போது மக்கள் அவளது வார்த்தைகளை ஏற்பார்கள் என்று புலப்படுகிறது.

## 7. போர் வேட்கையை தூண்டிய தாய்:

கன்ஸா (ரலி) என்ற பெண்மணிக்கு நான்கு ஆண்மக்கள் இருந்தனர். அப்பெண்மணி தன மக்களை சாப்பிட வைக்கும் போதெல்லாம் "மகனே! நான் உங்கள் மாமன்-மார்களை இழிவுபடுத்தியவள் அல்ல நான் உங்கள் தந்தைக்கு துரோகம் செய்தவளும் அல்ல" என்று அடிக்கடி கூறிக் கொண்டே இருப்பார்.

மக்களுக்கு இதன் கருத்து என்னவென்றே புரியவில்லை. எனவே தாயிடமே கேட்டார்கள். அம்மா! தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? என்று கேட்ட போது,

"என் மக்களே! நான் பரிசுத்தமான, பத்தினித்தனமான வாழ்க்கைக்கு சொந்தக்காரி. நான் வாலிப வயதுடையவளாக இருந்த போது, உங்கள் மாமன்மார்களை தலைகுனியச் செய்யும் காரியங்களில் ஈடுபட்டதில்லை. அதுபோலவே நான் திருமணமான முதல் இன்று வரை உங்கள் தந்தையின் விரிப்பில் யாரையும் அனுமதித்ததில்லை - எனவே உங்கள் தந்தைக்கும் துரோகம் செய்யாத தூயவள் நான்" என்று தாய் கூறிய போது,

"அம்மா நீங்கள் எங்களிடம்எதையோ சொல்ல விரும்புகிறீர்கள்? போல் தெரிகிறது. அதை என்னவென்று தெளிவாக விளக்கிச் சொல்லுங்கள்" என்று ஆண்மக்கள் கேட்க ஆரம்பித்தனர்.

## 8. உங்கள் "ஜனாஸா" க்களை காண வருவேன்:

நீங்கள் வளர்ந்து வாலிபராகும் போது அல்லாஹ்வின் பாதையில் போரிட வேண்டும். நீங்கள் அனைவருமே வீரமரணம் அடைய வேண்டும். கியாமத் நாளன்று அல்லாஹ், "எனக்காக வீரமரணம் அடைந்த தாய்மார்கள் எங்கே?" என்று அழைக்கும் போது எல்லா

நபிமார்களின் முன்னிலையிலும் என் ரப்புக்கு முன் வந்து நிற்கும் பெரும்பாக்கியம் நான் பெற வேண்டும். இதுவே என் மனம் விரும்பும் நீண்ட நாளைய பேரவா. என்று தன் இரகசியத்தை தன் மக்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

"என் மக்களே நன்றாக துணிச்சலோடு போராட வேண்டும். நான் உயிருடன் இருக்கும் போதே வீரமரணம் அடைந்தால், உங்கள் ஜனாஸாக்களை காண வருவேன். (எதிரிகளை எதிர்த்து நின்றதன் அடையாளமாய்) உங்கள் 'நெஞ்சில்' காயம் இருந்தால் உங்களுக்காக நான் துஆ செய்வேன்.

(போரை விட்டு புறமுதுகிட்டு ஓடியதன் அடையாளமாய்) உங்கள் 'முதுகில்' காயமிருந்தால், என் கடமையை நிறைவேற்றாத குற்றத்திற்காக நான் உங்களை எப்போதும் மன்னிக்கவே மாட்டேன்" என்று சூழுரைத்தாள் அந்தப் பத்தினித்தாய். அந்த தாயின் வீரம் செறிந்த வார்த்தைகள் அவரது ஆண்மக்களின் உள்ளத்தை தட்டியெழுப்பியதுடன் பிற்காலத்தில் தீனுக்காக போர் புரியும் வீர மறவர்களாக உண்மையாகவே மாறினார்கள்.

## 9. அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி) யை உருவாக்கிய தாய்:

ஹள்ரத் அஸ்மா (ரலி) அவர்கள், ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய சகோதரி ஆவார்கள். இவர்களது முதுமைப்பருவத்தில் தன் மகன் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரலி) உடன் மக்காவில் வசித்து வந்தார்கள். அச்சமயத்தில் கொடுங்கோலன் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் ஆட்சி செய்து வந்தார். ஒரு சமயம் ஹஜ்ஜாஜ்க்கு எதிராக அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி) தன் கருத்தை சொன்னதால், ஹஜ்ஜாஜ் தனது பெரும்படையை திரட்டிக் கொண்டு மக்கா வந்தார். ஹள்ரத் அப்துல்லாஹ்வின் வீட்டை முற்றுகையிட்டார். ஹள்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் தன் உறவினர்களுடன் போரிட்டார்கள்.

ஹள்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் விரோதிகள் வெற்றியடைந்து கொண்டு வருவதை கண்ட போது அருகிலிருந்த தன் வீட்டிற்குள் சென்று தன் தாயிடம் ஆலோசனை செய்தார்கள்.

“அம்மா இன்னும் சிறிது நேரத்தில் நான் ஷஹீதாகப் போகிறேன். நான் இதை உலகாதாயத்திற்காக செய்யவில்லை என்பதை அறிவீர்கள். அல்லாஹ்வின் தீனை உயர்த்த வேண்டும் என்பதற்காகவே செய்கிறேன். இது குறித்து தங்கள் ஆலோசனை என்ன?” என்று கேட்டார்கள். எவ்வளவு கீழ்படிந்த மகன் என்பதை பாருங்கள்! கடும் நெருக்கடியான சூழ்நிலையிலும் தன் தாயிடம் ஆலோசனை செய்கிறார்கள்.

அப்போது தாய் கூறினார்கள். “நீ அசத்தியத்தில் இருந்தால் உன்னை விட கெட்ட மனிதன் உலகில் யாரும் இல்லை. ஏனென்றால் உனக்காக உன் உறவினர்கள், ஆதரவாளர்களை போரில் பலி கொடுக்க போகிறாய்! நீ சத்தியத்தில் இருந்தால் மௌத் எப்போது வந்தாலும் ஷஹீதுடைய மரணம் தான். எனவே இதில் பயப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?” இந்த உபதேசத்தை கேட்டவுடன் “அம்மா எனக்கும் வெளியே சென்று போரிட்டு ஷஹீதாக வேண்டுமென்ற ஆசை தான். இருப்பினும் தங்களது துஆவை பெற வேண்டும் என்பதற்காகவே இந்த ஆலோசனை செய்தேன்” என்றார் இதை கேட்டவுடன் படுத்திருந்த அஸ்மா (ரலி) எழுந்து அமர்ந்தார்கள். மகனின் நெற்றியில் முத்தமிட்டார்கள். ஆச்சரியமான துஆக்கள் பல செய்து அல்லாஹ்விடம் தன் மகனை ஒப்படைத்தார்கள்.

## 10. ஆச்சரியமான துஆ:

“யா அல்லாஹ்! என் மகன் இரவில் நீண்ட நேரம் நின்று வணங்கியதை நீ அறிவாய்!

யா அல்லாஹ்! என் மகன்உன் அன்பின் மிகுதியால் ஸஜ்தாவில் அழுது கொண்டிருந்ததையும் நீ அறிவாய்!

யா அல்லாஹ்! புனிதமான இந்த அரேபிய பூமியின் கோடை வெப்பத்திலும் உன் பிரியத்தால் நோன்பு நோற்றதையும் நீ அறிவாய்!

யா அல்லாஹ்! என் மகன்தாய், தந்தைக்கு கட்டுப்பட்டு பணிவிடை செய்ததையும் நீ அறிவாய்!

யா அல்லாஹ்! என் மகனை உன்னிடத்திலேயே ஒப்படைக்கிறேன். எனக்கு இவ்விஷயத்தில் பொறுமை, நன்மை இரண்டிற்கான கூலியையும் தருவாயாக'' என்று அஸ்மா (ரலி) துஆ செய்து விடை கொடுத்தார்கள்.

தாயின் துஆவுடன் வெளியே வந்த ஹள்ரத்இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள் விரோதிகளை எதிர்த்து போரிட்டு இறுதியில் வீரமரணம் அடைந்தார்கள்.

விரோதிகள் அவர்களைப் பிடித்து மக்கள் அதிக நடமாட்டம் நிறைந்த கடைவீதியில் மற்றவர்களுக்கு படிப்பினை தருவதற்காக தூக்கில் தொங்க விட்டார்கள். யாரும் (அந்த ஜனாஸாவை நெருங்க முடியாதவாறு) காவலர்களால் வேலி போடப்பட்டிருந்தது.

அவர்களது உடல் 40 நாட்களாக மைதானத்திலேயே தொங்க விடப்பட்டிருந்ததால், தூக்குகயிற்றில் இழுத்து அவர்கள் கழுத்து நீண்டுவிட்டது. தன் மகனுடைய உடல் இத்தனை நாட்களாக தூக்கில் தொங்கிய செய்தியை அறிந்து தள்ளாத வயதிலும் கைத்தடியை ஊன்றிப் பிடித்துக் கொண்டே மகன் தூக்கில் தொங்குமிடத்தில் அஸ்மா (ரலி) அவர்கள் வந்தார்கள்.

“40 நாட்களாக சவாரியிலேயே இருக்கும் இத்திருமகனை அதிலிருந்து இறக்கிவிட யாருமில்லையா?'' என்று அஸ்மா (ரலி) அவர்கள் கேட்க அருகிலிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. இறுதியாக பொது மக்களின் பெரு முயற்சியில் ஜனாஸாவை கீழே இறக்கி அடக்கம் செய்தார்கள்.அல்லாஹு அக்பர்.

தன் மகனின் தியாகத்தை கண்ணாரக் கண்டும் கூட தன் துணிச்சலான வார்த்தைகளை பேசிய வீரம் செறிந்த தாயாக ஹள்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

## 11. தாய், தந்தையர் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க வேண்டும்:

தாய், தந்தையர் தங்களுக்குள் கருத்தொற்றுமை இல்லாமல்

இருந்தால், தந்தை தன் மகனுக்கு செய்யும் எந்த அறிவுரையும் பலன் தராது. தந்தை எவ்வளவு தான் நல்லவராகவும் தீன்தாரியாகவும் இருந்தாலும் மனைவியுடன் ஒருமித்த கருத்து இல்லையெனில், அவரால் தன் மக்களை தீன்தாரியாக மாற்ற இயலாது. மணிக்கணக்கில் உபதேசம் செய்துவிட்டு வீட்டிற்கு வெளியே செல்லும் கணவரை பார்த்து மனைவி “உங்கத்தாவுக்கு மூளை கெட்டு கிடக்கிறது” என்று ஒரே ஒரு வார்த்தைத் தான் சொல்லுவார். உடனே மகன் “அம்மா சரியாகத் தான் சொன்னாய்” என்று தாயின் கருத்துக்கு ஒத்துப்போவார், எனவே நம் குழந்தைகளை நல்லவர்களாக்கும் தாய், தந்தையர்களின் கருத்து ஒருமித்து இருப்பது அவசியமாகும்.

நூஹ் (அலை) அவர்களது மகன் தன் தந்தையின் பேச்சை கடைசி வரை ஏற்காமல் போனதற்கு அடிப்படைக் காரணம் நூஹ் (அலை) அவர்களின் மனைவி அவர்களோடு கொண்டிருந்த கருத்து வேறுபாடு தான் என்று குர்ஆனின் விரிவுரையாளர்கள் விளக்கமளித்துள்ளனர். எல்லா நபிமார்களின் மனைவியரும் பத்தினித்தனமான பெண்களாகவே இருந்தனர்.

ஆனால் சில நபிமார்களின் மனைவியர்கள் மட்டும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். ஹள்ரத் நூஹ் (அலை) அவர்களின் மனைவியும் நூஹ் நபியின் வார்த்தைகளை ஒருபோதும் ஏற்கவில்லை. இதனால் அவர்களது மகனும் தந்தையின் வார்த்தையை ஏற்கவில்லை. எனவே தந்தையின் கண்முன்னாலே மகன் பெருவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டார். எனவே, எந்த தாய்மார்கள் தன் குழந்தைகள் நல்லவர்களாக வேண்டும் என்று விரும்புகின்றார்களோ முதலில் அவர்கள் தன் கணவனோடு ஒத்த கருத்துள்ளவர்களாக மாறட்டும்.பிறகு இருவரும் சேர்ந்து தன் குழந்தைகளை தீனின் பக்கம் அழைக்கட்டும். இவ்வாறு இருவரும் அழைத்தால் குழந்தைகள் தீனின் பக்கம் வருவார்கள்.

## 12. கணவனது மனதில் மனைவியின் அந்தஸ்து:

பெண்ணின் இரண்டாம் பரிணாமம் மனைவியாவாள். கணவனின்

அன்பு கிடைக்கிற ஒவ்வொரு மனைவியும் கணவனை தன் கருத்தை ஏற்றுக் கொள்பவராக மாற்றி விடுகிறாள்.

சில பெண்கள் இந்த வாய்ப்பை ஆடைக்கும், காலணிக்கும் மட்டுமே பயன்படுத்துகின்றனர். சிலர், தனக்குப் பிரியமான வீட்டை கட்டவைத்து விடுகின்றனர்...

சில பெண்கள் தனக்கென சொத்துக்களை வாங்க வைத்து விடுகின்றனர். தன் கணவனை எந்த காரியத்திற்கும் சம்மதிக்க வைக்க முடியும்? என்ற வாய்ப்பு மனைவிக்கு மட்டுமே வாய்க்கப் பெற்ற திறமையாகும்.

1. 'குல்ஷன்' ஆராபேகம் என்றொரு அரசி தன் கணவனிடம் டெல்லியில் சாலிமார் தோட்டம் போல ஒரு பெரும் தோட்டத்தையே தனக்காக அமைக்க வைத்தார்.

2. முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜஹான், தனக்காக தன் கணவனிடம் கப்ரு (அடக்குமிடம்) கட்டவைத்தார். இன்று அவ்விடம் பகலில் கூட இருள் சூழ்ந்ததாக திகிலடையச் செய்கிறது.

3. முகலாயப் பேரரசர் ஷாஜஹானின் மனைவி மும்தாஜும் தன் கணவரை தாஜ்மஹாலை கட்ட வைத்தார். இன்றைக்கு அது உலக அதிசயங்களில் ஒன்றாய் காட்சியளிக்கிறது. எனினும் தாஜ்மஹால் மூலம் மும்தாஜ்க்கு என்ன பலன் கிடைத்தது? ஒன்றுமே இல்லை.

4. 'ஜுபைதா காத்துன்' என்றொரு அரசி தன் கணவரிடம் "ஹஜ்ஜ்க்கு செல்லும் மக்கள் ஹஜ்ஜுப் பயணத்தில் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே, "புராத்" நதியிலிருந்து அரஃபா மைதானம் வரை கால்வாயை வெட்டுங்கள்" என்று கூற, கணவர் ஹாரூன் ரஷீதும் மனைவியின் ஆசை வார்த்தைகளுக்கு மதிப்பளித்து கால்வாயை உருவாக்கினார். அந்தக் கால்வாயில் இலட்சக்கணக்கான மனிதர்களும், உயிரினங்களும் நீரைப் பருகினர். தாகம் தீர்த்தனர். இதுவே அவர்களுக்கு கியாமத் வரை நன்மைதரும் "ஸதகா ஜாரியா" வாக ஆகிவிட்டது.

மேற்கூறப்பட்ட நான்கு பெண்மணிகளும் அரசிகள் தான். எனினும் முதல் மூன்று அரசிகளும் தனது மறுமைக்காக எந்தப் பயனும் தராத காரியங்களை செய்யத் தூண்டினார்கள். ஆனால் நான்காவது அரசியோ தன் கணவரை தன் மறுமைக்கு பயன் தரும் காரியத்தை தூண்டி செய்ய வைத்தார்.

கணவன்மார்கள் மனைவியின் பேச்சை ஏற்பார்கள் என்பதற்கு குர்ஆனிலேயே ஒரு சான்று கிடைக்கிறது. ஃபிர்அவ்ன் பனீ இஸ்ராயீல் வம்சத்தில் பிறந்த ஆயிரக்கணக்கான ஆண் மக்களைக் கொன்று குவித்த கொடியவனாவான். இருப்பினும் ஆற்றில் மிதந்து வந்த பெட்டியை திறந்து குழந்தை மூஸாவை மனைவி ஆசியா பார்த்த போது தன் கணவரிடம்,

لَا تَقْتُلُوهُ عَسَى أَنْ يَنْفَعَنَا أَوْ نَتَّخِذَهُ وَلَدًا

"இக்குழந்தையை கொன்று விடாதீர்கள். இதுவே நமக்கு பலனாக அமையலாம், அல்லது நமது குழந்தையாக ஆக்கிக் கொள்ளலாம்" என்று சொன்னார் (அல்குர்ஆன்: 28-9)

ஆயிரக்கணக்கான பாவமறியாப் பாலகர்களை கொலை செய்த கொடுங்கோலன் ஃபிர்அவ்ன் கூட, தன் மனைவியின் அன்பு வார்த்தைகளுக்கு அடிபணிந்து "நான் இக்குழந்தையை கொல்ல மாட்டேன்" என்று உடனடியாக தயாரானான் என்றால் மனைவியன் வார்த்தைக்கு எவ்வளவு வீரியம் உண்டு? என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

மனைவி தன் கணவனுக்கு நல்ல புரியதலை உருவாக்கி விட்டாலே போதும் பெரும்பெரும் விஷயங்களை தனக்கு சாதகமாக திருப்ப முடியும். மனைவி ஷரீஅத்தின் காரணமாக தன் கணவனைப் பின்பற்றுகிறாள். கணவன் அன்பின் காரணத்தால் மனைவியை பின்பற்றுகிறார்.

## 13. அபூதல்ஹா (ரலி) யை முஸ்லிமாக்கிய பெண் :

ஹள்ரத் அனஸ் (ரலி) அவர்களது தந்தை மாலிக் இப்னு நள்ர்

வபாத்தானதால், தாய் உம்மு ஸுலைம் (ரலி) விதவையானார். அச்சமயம் மதீனா நகரின் அழகிய இளைஞராகவும், செல்வச் செழிப்பு மிக்கவராகவும் அபூதல்ஹா திகழ்ந்தார். அவரது ஆலோசனைகள் மிகுந்த மதிப்பளிக்கப்படுமளவு அவர் கண்ணியம் நிறைந்தவராகவும் இருந்தார்.

அபூதல்ஹாவுக்கு உம்மு ஸுலைம் (ரலி) ஏற்கனவே நெருங்கிய உறவினராகவும் இருந்ததால் உம்மு ஸுலைமுக்கே நேரடியாக, திருமணத்தூது அனுப்பினார்.உம்மு ஸுலைம் நன்கு யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். அபூதல்ஹா இதுவரை முஸ்லிமாகாமல் இருந்ததால் முதலில் அவரை தீனின் பக்கம் சமயோசிதமாக அழைத்தார்.

“அபூதல்ஹா! எந்தப்பெண்ணிடம் நீங்கள் திருமணத்தூது அனுப்பினாலும் அதை எந்தப் பெண்ணும் மறுக்க மாட்டார்கள். (அந்த அளவு கண்ணியமானவர்கள் நீங்கள்)

ஆனால் நீங்கள் காஃபிர்!நான் முஸ்லிம். நீங்கள் மரக்கட்டைகளால் உருவாக்கப்பட்ட சிலைகளை வணங்குபவர். நானோ யாவற்றையும் படைத்த ஓர் இறைவனை வணங்குபவன். எனவே உங்களுடன் நான் இணைந்து வாழ்வது எப்படி சரியாகும்?

உம்மு ஸுலைமின் அன்பான அழைப்பு இறுதியாக அபூதல்ஹாவின் மனத்தை இரங்கச் செய்தது. உம்மு ஸுலைம் உடனே சொன்னார்.

நான் உங்களது திருமணத்தூதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.

இஸ்லாமிய பெண்ணை திருமணம் செய்ய மஹர் தர வேண்டும். என்னுடைய மஹர் நீர் இஸ்லாமை ஏற்பது தான்” என்றார்.

இதை கேட்டவுடன் அபூதல்ஹா கலிமா சொல்லி இஸ்லாத்தை ஏற்ற பின் திருமணம் இனிதே நடந்தேறியது. இதனை பூமான் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு சிலாகித்தார்கள்.

"உலகில் எந்தப் பெண்ணின் மஹறும் உம்மு ஸுலைமுடைய மஹரை விட சிறந்ததல்ல. காரணம் தனது மஹராக தன் கணவரிடம் நீங்கள் முஸ்லிமாகிவிடுங்கள். அதுவே என் மஹர்!" என்று கூறியவர் ஆவார்.

## 14. ஹள்ரத் இக்ரிமா (ரலி) யை முஸ்லிமாக்கிய மனைவி:

அபூஜஹ்லின் மகன் இக்ரிமா (ரலி) ஹிஜ்ரி-8 மக்கா வெற்றிக் கொள்ளப்படும் வரை இஸ்லாமை தழுவாதிருந்தார். மக்கா வெற்றிக்குப் பின் நபிகளார் தன்னை கொல்ல உத்தரவிட்டு விடுவார்களோ என்றஞ்சி மக்காவை விட்டு விரண்டோடிவிட்டார்.

இவரது மனைவி உம்மு ஹகீம் (ரலி) அறிவார்ந்த பெண்மணி. இவர் நேராக நபிளாரின் சபைக்குச் சென்று கலிமா சொல்லி முஸ்லிமானதுடன் நபிகளாரிடம் ஒரு வேண்டுகோளை முன் வைத்தார்.

"அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் மிகுந்த இரக்க சிந்தனையும், நற்குணமும் வாய்க்கப் பெற்றவர் என்பதை நானறிவேன். எனவே, என் கணவரின் உயிருக்குப் பாதுகாப்புத் தர வேண்டும்" என்றார்.

நபிகளாரும் அதனை ஏற்று கணவர் இக்ரிமா (ரலி) க்கு பதுகாப்பு அளிக்கிறேன் என்றுரைக்க, மிக்க மகிழ்ச்சியடைந்த உம்மு ஹகீம் (ரலி) தம் கணவரைத் தேடிப் புறப்பட்டார்கள். நீண்ட பயணம் செய்து ஓரிடத்தை அடைந்த போது தான் தன் கணவர் ஆற்றைக் கடந்து மறு கரைக்கு சென்று கொண்டிருக்கிறார் என்பது தெரிய வந்தது.

உடனே உம்மு ஹகீம் (ரலி) ஒரு படகை வாடகைக்கு பேசி வெகு வேகமாக சென்று ஆற்றின் மத்தியில் கணவரின் படகோடு தன் படகை சேர்த்தார். தன் கணவரைக் கூப்பிட்டுப் பேசினார். "எங்கே செல்கிறீர்? நான் உமக்காக 'உயிர் பாதுகாப்பு' பெற்று வந்துள்ளேன். வாருங்கள்! திரும்பிச் செல்லலாம். இனி நமது வாழ்க்கையை மக்காவிலயே கழிக்கலாம்" என்றார். உடனே கணவர் மனைவியின் படகிற்கு வர, இருவரும் மக்காவை நோக்கி செல்ல ஆரம்பித்தனர்.

செல்லும் பாதையிலேயே இரவை அடைந்து விட்டதால் ஓரிடத்தில்

கணவர் மனைவி இருவரும் இரவை கழிக்க நேரிட்டது. நீண்ட நாள் பிரிவிற்குப் பிறகு இவ்விருவரும் சந்தித்த முதல் இரவாக அன்றைய இரவு இருந்தது. தனிமையில் உரையாடிய கணவர் இக்ரிமா மனைவியை உறவுக்கு அழைத்தார்.

சமயோசித அறிவு கொண்ட உம்மு ஹகீம் “நான் முஸ்லிமாகிவிட்டேன். தாங்கள் இதுவரை முஸ்லிமாகவில்லை. எனவே நான் உங்களது மனைவியாக இருந்த போதிலும் கூட இச்சமயம் தங்களுக்கு நான் ஹலாலல்ல (ஆகுமானவள் அல்ல) தாங்கள் முஸ்லிமாகும் வரை இதற்கு சம்மதிக்க மாட்டேன் என்றார்.

இறுதியாக கணவரை கூட்டிக் கொண்டு மக்கா வந்து கலிமா சொல்லி முஸ்லிமானார். இதன் பிறகே கணவன் மனைவியின் புதிய உறவு தொடர்ந்தது.

இந்நிகழ்ச்சியிலிருந்து அன்றைய கால மனைவியர்கள் தீனுடைய விஷயத்தில் எவ்வளவு உறுதியாக இருந்துள்ளனர் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் இன்றோ சின்ன விஷயத்திற்குக் கூட பெண்கள் எத்தனையோ திட்டம் தீட்டுகிறார்கள்.

இருவரின் மனதிலும் நோய் இருப்பதால் கணவன், மனைவி இருவரும் ஒருவர் மற்றவரை, “என் கணவர் பர்தா போட அனுமதிப்பதில்லை” என்றும், “நான் என்ன செய்வது? என் மனைவி என் பேச்சை கேட்பதில்லை” என்றும் ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி இருவரும் ஷரீஅத்தை தட்டிக் கழிக்கின்றனர்.

உலக விஷயத்தில் கணவனை மனைவி தன் பேச்சை ஒப்புக் கொள்ள வைக்கும்போது, தீனுடைய விஷயத்திலும் கண்டிப்பாக நல்ல கணவன் தன மனைவியின் நல்ல விஷயங்களை ஏற்பார் என்பதனை பெண்கள் தங்கள் கவனத்தில் பதிய வைக்க வேண்டும்.

## 15. யர்மூக் போரில் பெண்களின் சேவை:

யர்மூக் போரின் போது ரோம் நாட்டு படையினர் இலட்சக்கணக்கில் இருந்தனர். எதிர்தரப்பில் முஸ்லிம்களோ மிகமிக குறைவு. வெள்ளைக்

குதிரையின் நெற்றியில் கருப்பு அடையாளம் தென்படுவது போல ரோமப் பெரும்படையின் முன் முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாக சரித்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. ரோமப் படையினரில் ஒரு பிரிவினர் சண்டையிட்டு களைத்து விட்டால் அவர்கள் பின்வாங்குவர். புத்துணர்ச்சியுடன் உள்ள மற்றொரு பிரிவினர் முஸ்லிம்களை எதிர்த்து போர் செய்வர். முஸ்லிம்களோ தொடர்ந்து மணிக்கணக்கில் அவர்களோடு போர் செய்து கொண்டே இருந்தனர்.

இறுதியாக அவர்களுக்கும் களைப்பு ஏற்படும்போது வலது புறத்தில் உள்ள படையினர் கொஞ்சம் பின்வாங்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு பின்வாங்குவதை கூடாரத்திலிருந்த முஸ்லிம் பெண்கள் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். சௌதா பின்த் ஆஸிம் (ரலி) என்ற பெண்மணி ஒரு மேட்டின் மீது ஏறி நின்று மற்ற முஸ்லிம்களை கூவி அழைத்தார். "என் சகோதரிகளே! நீங்கள் கூடாரத்தில் உட்கார்ந்து கொண்டே இருந்தால் உங்கள் கணவன்மார்கள் பின்வாங்கிக் கொண்டேதான் இருப்பார்கள் என்று கூறினார்கள். இதைக கேட்டு வெளியே வந்த 'லுப்னா பின்த் ஜரீர்' என்ற ஸஹாபிப் பெண்

"அரேபிய பெண்மணிகளே! திரும்பி ஓடும் உங்கள் ஆண் மக்களுக்கு முன்னால் போய் நில்லுங்கள். உங்களது பாலகர்களை கைகளில் உயர்த்திக் காட்டி எங்களையும் எங்களது குழந்தைகளையும் வேற்று நாட்டு காஃபிர்களிடத்தில் ஒப்படைத்து விட்டு நீங்கள் எங்கே செல்ல நினைக்கிறீர்? என்று உங்களுடைய கணவன்மார்களைப் பார்த்துக் கேளுங்கள்" - என்று உருக்கமாக உரையாற்றினர்.

இதைக் கேட்டவுடனே முஸ்லிம் பெண்களும் தங்கள் வீரத்தையும், விவேகத்தையும் வெளிப்படுத்தினர். தங்களது பச்சிளங்குழந்தைகளை கைகளில் ஏந்திய வண்ணம்,

"எங்களையும் எங்களது குழந்தைகளையும் காஃபிர்களின் கைகளில் தாரை வார்த்துவிட்டு நீங்கள் எங்கே செல்வீர்?" என்று கூற, தங்களது குழந்தைகளை கண் முன் கண்ட முஸ்லிம் படை வீரர்கள் போர்க்களம் நோக்கி திரும்பிச் சென்றனர். ரோமர்களுடன் போர் புரிந்தனர்.

போரில் கலந்து கொண்ட பெண்களில் ஹள்ரத் ஹம்சா (ரலி) யைக் கொன்ற ஹிந்தாவும் ஒருவர். ஹிந்தாவும் அவரது கணவர் அபூ ஸுஃப்யானும் முன்னொரு நேரத்தில் இஸ்லாமியர்களின் கடும் பகைவர்களாக இருந்தனர். ஹிஜ்ரீ 8 மக்கா வெற்றியின் போது இருவரும் முஸ்லிமாகிவிட்டனர். ஹிந்தா இப்போது முஸ்லிமாக ஆகியிருந்ததால் முஸ்லிம்களை தூண்டும் விதமாக இவ்வாறு கவிதை படித்தார்.

نحن بنات الطارق نمشي على نّمارق

إن تقبلوا نعانق او تدبّروا نفارق

"நாங்கள் நட்சத்திரங்களின் பிள்ளைகள், பஞ்சு மெத்தைகள் மீதே நடந்து செல்பவர்கள். நீங்கள் சண்டையில் முன்னேறிச் சென்றால் பிரியப்படுவோம். பின் வாங்கினால் பிரிந்து விடுவோம். அந்தப் பிரிவு முடிவில்லாத பிரிவாகும்" என்ற இந்தக் கவிதையை பாடி ரோஷமூட்டினார்.

எங்கள் கணவன்மார்களே! நீங்கள் முன்னேறிச் சென்று வெற்றி பெற்றால் உங்ளுக்காக விரிப்பை விரிப்போம். உங்களை வரவேற்போம். நீங்கள் போரில் விரண்டோடினால் எங்களை காஃபிர்கள் அபகரித்துக் கொள்வார்கள். பிறகு உங்களது பெண்களும், பிள்ளைகளும் 'ஜனோஸாவாகி' விடுவர் – என்றார்.

பிறகு தன் கணவர் அபூஸுஃப்யானைப் பார்த்துக் கூறினார்.

இப்னுஹர்பே! (போர் மறவரே) நீங்கள் காஃபிராக இருந்த காலத்தில் நபிகளாருக்கு இழைத்த துன்பத்திற்கு பரிகாரம் தேடும் நேரம் இதோ வந்துவிட்டது. முன்னேறிச் சென்று உங்கள் உயிரைக் கொடுத்தால் அல்லாஹ், ரஸுலின் பார்வையில் வெற்றி பெறுவீர்கள்.

ஹிந்தா (ரலி) யின் பேச்சு ஸஹாபாக்களின் துணிச்சலை தட்டி எழுப்பியது. உடனே போருக்குத் திரும்பி போராடினார்கள். இறுதியாக அல்லாஹ் யர்மூக் போரில் வெற்றியை தந்தான்.

இந்தப் போரில் முஸ்லிம் பெண்கள் ஆற்றிய வீர உரை மற்றும்

சாதனையைப் போல வேறு எந்தப் போரிலும் காண்பது அறிது - என்றே வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## 16. சகோதரர்களின் பார்வையில் சகோதரிகளின் மதிப்பு:

சகோதரிகள் மீது சகோதரர்கள் எந்த அளவு மதிப்பும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய ஓர் உதாரணம் கூறலாம்.

சகோதரிக்கு திருமணம் நடந்து தன் பிறந்த வீட்டை விட்டு பிரியும் போது (அண்ணன், தம்பிகளான) சகோதரர்களின் கண்களில் கண்ணீர் வழிகிறதே ஏன்? பிரிந்து செல்லும் அக்காள், தங்கை மீதுள்ள பாசம் தான் இவரை அழ வைக்கிறது. ஒரே தாயின் வயிற்றில் பிறந்து ஒரே வீட்டில் ஒன்றாக வளர்ந்தவர்கள் அல்லவா? இப்போது பிரியும் போது தன்னை விட்டும் தங்கை தூரமாகுவதாக உணர்கின்றனர். புகுந்த வீட்டில் தன் தங்கைக்கு என்ன ஆகுமோ? என சகோதரன் பதறுகிறான். அவளை ஏற்பவன் நன்முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென அங்கலாய்த்து அழுகிறான்.

## 17. பால்குடி சகோதரிக்கு மரியாதை:

ஹுனைன் போரின் போது ஹவாஜின் கோத்திரத்தை சார்ந்தவர்களுடன் ஸஹாபாக்கள் போரிட்டு சில ஆண்களையும், பெண்களையும் கைது செய்தனர். அப்பெண்களில் ஒருவர் வயது முதிர்ந்த மூதாட்டியாக இருந்தார்.

அம்மூதாட்டி ஸஹாபாக்களிடம் “நான் உங்களது தோழரின் (நபி) சகோதரி ஆவேன். என்னை உங்கள் தோழரிடம் கூட்டிச் செல்லுங்கள்” என்றார்.

ஸஹாபாக்களும் அப்பெண்மணியை நபியவர்களிடம் அழைத்துச் செல்ல, நபியவர்களிடம் தன் பழைய நினைவுகளையெல்லாம் கூறினார்.

நான் ஹலீமா ஸஅதிய்யாவின் மகள் “ஷீமா” தான். நான் உங்களது பால்குடி சகோதரி ஆவேன். ஆடு மேய்க்கச் செல்லும் போதெல்லாம் உங்களை கூட்டிச் செல்வேன். உங்களை என் மடியில் வைத்து உணவு

ஊட்டி விடுவேன். ஒரு சமயம் உங்களுக்கு காயம் கூட ஏற்பட்டது. அக்காயத்தின் தழும்பு கூட இப்போதும் இருக்கும் – எனக் கூறினார்.

நபி (ஸல்) அவர்களுக்கு காயத்தை பார்த்தவுடனே, தன்னிடம் பேசுவது உண்மையான பால்குடி சகோதரி தான் என்பதை புரிந்து கொண்டார்கள். அத்துடன் நபிகளின் கண்களில் கண்ணீர் வடியத் தொடங்கியது. பின் நபியவர்கள் தன் சகோதரியை வரவேற்க எழுந்து நின்றார்கள். தன் மேலங்கியை எடுத்து விரித்தார்கள். மேலங்கியின் மீது அமரச் சொன்னார்கள்.

“நீங்கள் இங்கு இருக்க விரும்பினால் நான் உங்கள் தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்வேன். உங்கள்குடும்பத்தினரிடமே செல்ல விரும்பினாலும் நீங்கள் செல்ல அனுமதியுண்டு” என்று நபியவர்கள் கூறினார்கள்.

அப்பெண்மணி தன் குடும்பத்தினரிடம் செல்ல அனுமதி கேட்ட போது, நபியவர்கள் அவர்களுக்கு மூன்று அடிமைகளையும், சேவை செய்ய ஓர் அடிமைப் பெண்ணையும் ஆட்டு மந்தை ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கி கண்ணியத்துடன் அனுப்பி வைத்தார்கள்.

ஒரு நல்ல சகோதரர் தன் சகோதரி குறித்து எவ்வளவு மதிப்பும், மரியாதையும் கொண்டிருப்பார்? என்பதை இந்நிகழ்வின் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். அவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொண்ட தன் சகோதரனுக்கு ஒரு சகோதரி தீனுடைய விஷயத்தை ஏன் எடுத்துச் சொல்லக் கூடாது? சற்று யோசிக்க வேண்டும்.

## 18. சகோதரர்களுக்கு நல்லுபதேசம் செய்ததன் விளைவு:

ஹள்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்திக்க அவர்களது சகோதரர் அப்துர்ரஹ்மான் இப்னு அபூபக்கர் (ரலி) வந்தார்கள். இதனிடையே ஒளு செய்வதற்காக சென்ற அவர் குதிங்கால்கள் சரியாக நனையாமல் ஒளு செய்து இருப்பதை கண்ணுற்ற ஆயிஷா (ரலி) தன் சகோதரரை நோக்கி,

சகோதரரே! ஒளுவின்போது கால்களை சரிவர நனைக்காமல்

விட்டவரின் நனையாப்பகுதியை கியாமத் நாளில் நெருப்பால் எரிக்கப்படும் என்று நபியவர்கள் கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் சகோதரர் திரும்பவும் ஒளு செய்து விட்டு பள்ளிக்கு சென்றார் - என்பதை அறிவதன் மூலம் ஸஹாபி பெண்மணிகளும் தன் சகோதரர்களுக்கு நல்லுபதேசங்களை செய்துள்ளனர் என்பது தெரிய வருகிறது.

இப்னு உமர் (ரலி) அவர்கள் தமது மனைவி இறந்த பின் "இனி மறுமணம் செய்ய மாட்டேன். ஹதீஸ்களை கற்பது கற்பிப்பதிலேயே ஈடுபட்டு என் காலம் கழிப்பேன்" என்று உறுதி எடுத்தார். செய்தியறிந்த அவர்களது சகோதரி ஹப்ஸா (ரலி) அவர்கள் தன் சகோதரருக்கு உபதேசித்தார்கள்.

"என் சகோதரரே! நீங்கள்வாலிப வயதுடையவரக இருக்க இப்போது ஏன் மறுமணத்தை மறுக்குகின்றீர்! நீங்கள் திருமணம் செய்து கொண்டால், அல்லாஹ் உமக்கு நல்ல குழந்தைகளை வழங்கிடுவான். குழந்தைகள் முஃமினாக இருந்தால், தங்களது வாழ்வில் விடும் ஒவ்வொரு மூச்சிற்கும் பகரமாக அவர்களது தாய், தந்தையர்களின் அமல்களின் பதிவேட்டில் ஒரு நன்மை எழுதப்படுகிறது. "ஸதகதுன் ஜாரியா" என்னும் இந்த நிரந்தர நன்மையை ஏன் இழக்க நாடுகிறாய்?" என்று அன்பான தோரணையில் கூற இப்னு உமர் (ரலி) அவர்கள் தன் முடிவை மாற்றிக் கொண்டு மறுமணம் செய்து வாழ்ந்தார்கள் என்னும் இந்நிகழ்வில் முற்காலத்தில் சகோதரிகளும், தன் சகோதரர்களை மார்க்கப் பற்றுள்ளவர்களாக மாற்ற முயன்றுள்ளனர் என்பதை அறியலாம்.

## 19. தந்தையின் பார்வையில் மகளின் மதிப்பு:

பொதுவாகவே தந்தையர்கள் தன் பெண்மக்கள் மீது மிகுந்த அன்பும், பாசமும் வைத்திருப்பர். இதனால் தன் மகளின் திருமணத்தின் போது தந்தை தம் வாழ்வின் மொத்த சம்பாத்தியத்தையும் "சீதனம்"

எனும் பெயரில் வழங்குகிறார். இத்தனைக் கொடுத்தும், பிறகு வீட்டை விட்டுப் பிரியப் போகும் தன் மகளை பார்த்து தந்தையின்கண்களில் அவரையறியாமல் கண்ணீர் சொட்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இந்தக் கண்ணீர் எதனால் வருகிறது? மகளை பார்த்தவுடன் தன் சுமை குறைந்து விட்டது. தன் கடமை நிறைவேறிவிட்டது என்பதனாலா? இல்லையே?

தன்னை விட்டும் தன் ஈரக்குலை தனியாகிவிட்டதே! என்று தந்தையின் மனம் ஏங்குகிறது. பிறந்த வீட்டில் தன் மகள் மீது அளவிலா அன்பு கொண்டிருந்தோம். இதே அன்பை, அரவணைப்பை புகுந்த வீட்டில் பெறுவாளோ? இல்லையோ? என்று அவரின் மனம் பதறுகிறது. அதுவே கண்ணீராக மாறுகிறது.

ஒரு தந்தை தன் மகள் மீது எவ்வளவு அன்பு வைத்திருப்பார் என்பதைப்புரிய வேண்டுமானால்,பின்வரும் ஹதீஸைப் படியுங்கள்.

பத்ருப் போரில் பிடிப்பட்ட கைதிகள் நபிகளாரின் முன் கொண்டு வரப்பட்டபோது அவர்களின் தனது மருமகன் அபுல்ஆஸும் இருந்தார். அபுல்ஆஸ் நபிகளாரின் மூத்த மகளான ஹள்ரத் ஜைனபின் கணவர் ஆவார். அவர் இதுவரை இஸ்லாமில் இணையவில்லை. இருப்பினும் தன் மனைவிக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதியளித்தார்.

நீ விரும்பினால் மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்! ஆனால் நான் இஸ்லாமை ஏற்க மாட்டேன் என்றார். எனவே பத்ருப் போருக்குப் பின் ஹிஜ்ரத்தின் நோக்கத்துடன் ஜைனப் (ரலி) மக்காவில் இருந்து மதீனா நோக்கி பயணமானார். வழியில் ஹஜ்ரத் ஜைனபை அடையாளம் கண்டுகொண்ட காஃபிர்கள் நீ முஹம்மதின் மகளாக இருந்தும் எப்படி இவ்வளவு பாதுகாப்புடன் செல்லலாம்? என்று கூறி ஹஜ்ரத் ஜைனபை துண்புறுத்தினர். பயணம் செய்த ஒட்டகத்தில் இருந்து கீழே தள்ளினார்கள். கர்ப்பிணிப் பெண்ணான ஜைனபின் கரு கலைந்தது. இடுப்பில் கடும் வழி ஏற்பட்டு அவ்வலியுடன் வாழ்வை கழித்தார்கள்.

நபிகளாரின் ஈரக்குலைத் துண்டான ஹள்ரத் ஜைனபுக்கு ஏற்பட்ட

இவ்வேதனையைக் கண்டு "என் மகளை இப்படி தீனுக்காக துன்புறுத்தி வீட்டார்களே" என்று கூறி நபியவர்கள் அடிக்கடி அழுவார்களாம்.

மக்காவில் இருந்த ஹள்ரத் ஜைனப் (ரலி) அவர்களுக்கு தன் கணவர் மதீனாவில் கைதியாக பிடிபட்டுள்ளதையும், கைதிகளை தண்டனைத் தொகை கட்டி (Penalty) விடுதலைப் பெற்றுச் செல்லுமாறு நபியவர்கள் உத்தரவிட்டிருப்பதையும் அறிந்து தனது தங்க மாலையை (நெக்லஸ்) கழட்டித் தண்டனைத் தொகைக்கு அனுப்பி வைத்தார். தண்டனைத் தொகைக்குப் பகரமாக ஒவ்வொரு கைதியையும் விடுதலை செய்து கொண்டிருந்த சமயம் நபிகளாரின் கண்களில் ஹள்ரத் ஜைனப் அனுப்பி வைத்த நெக்லஸ் தென்பட்டவுடன் மகளுக்கு சீதனமாக வழங்கப்பட்டது நினைவுக்கு வந்தது. அத்துடன்தன் மகள் பட்ட துன்பங்கள் அனைத்தும் நினைவில் வந்ததால் கண்கலங்கிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஸஹாபக்களிடம் ஆலோசனை செய்தார்கள்.

எனது ஆலோசனையை நீங்கள் ஏற்பதாக இருந்தால், இந்த நகையைத் திருப்பிக் கொடுத்து அந்த அடிமையையும் விடுதலை செய்து விடுங்கள் என்று நபியவர்கள் கூற ஸஹாபாக்கள் அவ்வாறே செய்தார்கள்.

நபியவர்களுக்கு தன் மகள் மீது பிரியத்தை இந்நிகழ்வின் மூலம் நாம் யூகித்துக் கொள்ளலாம். இந்தப் பிரியம் ஒவ்வொரு தந்தைக்கும் இருக்கத்தான் செய்யும். தந்தையின் மனதில் கொண்டு பதிந்திருக்கும் அன்பை நல்வாய்ப்பாகப் பயன்படுத்தி மகள் தன் தந்தையை தீனின் பக்கம் திசைத் திருப்ப முயற்சிக்கலாமே! பிறகு தந்தை தன் மகளின் பேச்சை மதித்து ஏற்றுக் கொள்வதை நீங்களே பார்ப்பீர்கள்!

நபியவர்களின் பிரியம் மகள் மீது மட்டுமல்ல. மகளின் மகள் மீதும் இருந்தது. ஒரு சமயம் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக பள்ளிக்குச் சென்ற போது தன் மகள் ஜைனபின் மகளாகிய உமாமா பின்த் அபுல் ஆஸும் உடன் வந்திருந்தார். சிறு குழந்தையான உமாமாவை நபிகளார் தங்களது முபாரக்கான தோள்புஜத்தில் அமரவைத்த

வண்ணமே இமாமாக நின்று தொழ வைக்க ஆரம்பித்தார்கள். நபிகளார் ருகூவுக்கு செல்லும் போது குழந்தையை இறக்கி அருகில் நிற்க வைத்துக் கொண்டார்கள். பிறகு தக்பீர் கட்ட எழும்போது மீண்டும் தோள்புஜத்தில் அமர வைத்துக் கொண்டார்கள். இவ்வாறு பேத்தி தோள்புஜத்தில் இருந்தவாறே நபிகளார் தொழுகையை பூர்த்தி செய்தார்கள்.

மகளின் மக்கள் மீதே (பேரன், பேத்திகள்) இவ்வளவு பிரியம் உள்ள போது, மகள் மீது எவ்வளவு இருந்திருக்கும்? என்பதை நன்கு யோசியுங்கள்.

## 20. பெண்மக்கள் மீதான கடமை:

பெண்மக்கள் தங்களது தந்தையர்களை பிரியத்துடன் தீனின் பக்கம் திசைதிருப்ப வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. ஒரு முறை கூறிய உடனே கேட்க வேண்டும் என்ற அவசியமில்லை. மென்மையான முறையில் திரும்பத் திரும்பக் கூற வேண்டும். அது அதிகம் மாற்றத்தைத் தரும்.

தண்ணீர்க் குழாயில் (Tap) இருந்து வரும் தண்ணீர்ச் சொட்டு "டப்டப்" என்று தொடர்ந்து விழும்போது கீழே உள்ள கல் கூட துவாரம் விழுவதை பார்த்ததில்லையா? தண்ணீரின் மென்மையான இளகலான சொட்டு கூட கல்லுக்குள் பாதையை அமைத்துக் கொள்ளும் போது மகளின் கண்களில் வடியும் கண்ணீர் சொட்டுகள் தந்தையின் மனதில் பாதையை அமைக்க முடியாதா?

கியாமத் நாளன்று பெண்களிடம் நீ எவ்வளவு அமல் செய்கிறாய்? என்று கேட்கப்படுவது போலவே, உன்னை சுற்றியிருந்த மஹ்ரமான ஆண்களை தீனின்பக்கம்அழைத்தாயா? என்று அருகிலிருந்த மஹ்ரமான ஆண்களைப் பற்றியும் கேள்வி கேட்கப்படும்.

## 21. சில நிமிடம் சிந்திக்க:

முற்காலத்தில் வாழ்ந்த பெண்கள் தன் மஹ்ரமான ஆண்களை அல்லாஹ்விற்காக உயிரையே தியாகம் செய்யும் போருக்கு செல்ல

தயார் செய்தார்கள். ஆனால் இன்றைய மனைவியர்களோ தன் கணவன்களை பள்ளிவாசல் செல்வதற்குக் கூட தயார் செய்வதில்லை. தொழும் இடத்தில் நிறுத்துவதற்கோ சுன்னத்தான ஆடைகளை அணிய வைப்பதற்கோ கூட தயாராக்குவதில்லை. எவ்வளவு தூரம் ஈமான் பலவீனமாகிவிட்து.

“என் கணவர் தாடியை வைத்தால் எப்படி இருக்குமோ” என்று கவலையாக இப்பெண்கள் கூறிக் கொள்கிறார்கள். இப்படி யோசிக்கக் கூடாது.நபியவர்களின் சுன்னத் விஷயத்தில் மனதில் கவலை ஏற்பட வேண்டும்.

ஒரு தந்தையின் ஏதேனும் முக்கியப் பொருள் வீணாகிப் போய்விட்டால் மக்களுக்கும் அதிக கவலை ஏற்படுகிறது. நபியவர்கள் தன்னை “நான் இறையச்சமுள்ளவர்களின் தந்தை” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே இறையச்சமுள்ள பெண்களுக்கு நபிகளார் ஓர் ஆன்மீகத் தந்தையாவார்கள். இன்றைக்கும் நமது வீடுகளில் நபிகளாரின் சுன்னத் விஷயத்தில் பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறது, சுன்னத்துகள் (நம்மை விட்டும்) அகற்றப்படுகிறது. நமது ஆன்மீக தந்தையான நபியவர்களின் சுன்னத் (நம் கண் முன்னே) நம்மை விட்டும் பிரிக்கப்படுவதை நினைத்து வருத்தப்பட வேண்டும். துடிதுடிக்க வேண்டும். நமது வீடுகளை நபிகளாரின் சுன்னத்தான நடைமுறைகளால் அலங்கரிக்க முயல வேண்டும்.

நமக்கு ஒரு சிரமம் ஏற்படும் போது ஒருவர் நம்மிடம் இனிய (ஆறுதல்) வார்த்தைகள் பேசினால், அவரும், அவர் பேசிய வார்த்தைகளும் நம் வாழ்நாள் முழுக்க நம் நினைவில் நிற்கின்றன. என் துன்பத்தின் போது அவர் என்னுடன் இருந்தார் என்று பாராட்டிக் கொள்கிறோம்.

இன்று இஸ்லாமிற்கே நெருக்கடியான காலம் வந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் ஆடையில்லா அருவருப்பு கலாச்சாரம் பரவி வருகிறது. நாகரீகம் என்னும் போர்வையில் அநாகரீகம் பெருக்கெடுத்து

ஓடுகிறது.

முன்பெல்லாம் டீவியும், **VCR** ம் தீமைகளைப் பரப்பிக் கொண்டிருந்தன. பிறகு கேபிள் வந்தது. இப்போது கொஞ்சம் நஞ்சம் இருந்த குறையையும் INTERNET நிறைவு செய்துவிட்டது. INTERNET உம் ENTER NET ஆகிவிட்டது. ENTER என்றால் உள்ளே நுழைதல் NET என்றால் வலை, இண்டர்நெட்டில் அமர்ந்தவன் சிக்குண்டு போன வலையில் மாட்டிக் கொள்கிறான்.

இன்றைய இளைய ஆண்கள், பெண்கள் மணிக்கணக்கில் அமர்ந்து பொய்களைப் பேசிக் கழிக்கும் முஸீபத்தை இண்டர்நெட் நம்மிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டது. வாலிர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தீனின் இந்த அவல நிலையை கண்டு துடிப்பவர் யாரேனும் உண்டா?

ஒரு வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்டது. குறைவான ஆண்களே இருக்கிறார்கள். அல்லது அவர்கள் மட்டும் முழுவதும் அணைக்க முடியாது எனில் அங்குள்ள பெண்களும் சேர்ந்து தண்ணீர் நிரப்பியோ அல்லது வேறு ஏதேனும் உதவி செய்தோ நெருப்பை அணைப்பதில் துணையாக இருப்பார்களல்லவா?

இவ்வாறே இன்றைய உலகில் பாவ நெருப்பு பற்றிக் கொண்டு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. ஆண்கள் மதரஸாக்களின் வடிவத்தில், தஅவத் தஃலீமின் வடிவில், திக்ர் மஜ்லிஸ்களின் வடிவில் நெருப்பை அணைக்க முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களால் மட்டும் தனியாக அணைத்திட முடியாது. எனவே நல்ல பெண்மக்களும், நல்ல மனைவியர்களும் நல்ல தாய்மார்களும் தங்களது மஹ்ரமான ஆண்களுக்கு இப்பணியில் உதவியாளராக, வலது கரமாக மாற வேண்டும். ஆண்கள் செய்யும் தீனுடைய பணியில் மென்மேலும் செயல்பட காரணியாக தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இங்கே தீனைக் கற்றுக கொண்ட ஒவ்வொரு பெண்ணும் "கியாமத் நாளில் நான் ஒரு சாதாரண பெண்ணாக நிற்க மாட்டேன் தீனை

கற்றறிந்த ஆலிமாவாக தாஇயாவாகத்தான் அல்லாஹ்வின் முன் நிற்பேன்'' என்ற மனஉறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கியாமத் நாளன்று நபியவர்களின் முன்னால் ஹவ்லுல் கவ்ஸர் நீர்த்தடாகம் இருக்கும். இந்த உம்மத்தின் பொது மக்களுக்கு மலக்குகள் பாத்திரத்தில் நீர் நிரப்பி குடிக்கக் கொடுப்பர். ஆனால், உம்மத்தின் ஆலிம்களும், ஆலிமாக்களும் அவ்விடம் வரும்போது நபியவர்களே தங்களது பொற்கரங்களால் பாத்திரத்தில் நீர் நிரப்பி குடிக்கக் கொடுப்பார்கள் - என்று ஹதீஸில் வந்துள்ளது.

பொதுவாக சாதாரண மனிதர் வீட்டிற்கு வரும் போது, வீட்டின் வேலைக்காரர்களே அவர்களுக்கு பானம் புகட்டுகிறார்கள். முக்கியத்துவம் நிறைந்த நபர் வரும்போது விருந்தளிப்பவரான வீட்டின் உரிமையாளரே வந்து தன் கரத்தால் பானம் புகட்டுகிறார்.

சுப்ஹானல்லாஹ்! எவ்வளவு பெரும் பாக்கியம் - அல்லாஹ்வின் தூதரே தன் கரங்களால் கவ்ஸர் தடாகத்திலிருந்து நீர் புகட்டுகிறார்கள் என்றால் அவர் எத்துணை பாக்கியசாலி! - இது மட்டுமல்ல சுவனம் சென்றவுடன் அல்லாஹ்வே அவர்களுக்கு பானம் புகட்டுவான் என்று அல்லாஹ் கூறுகிறான்.

وَسَقَاهُمْ رَبُّهُمْ شَرَابًا طَهُورًا

அவர்களது இறைவனேஅவர்களுக்கு தூய பானத்தை புகட்டுவான்.

- அல்குர்ஆன் (தஹ்ர்:22)

இமாம் முஹம்மது (ரஹ்) அவர்களைப் பற்றி ஒரு தகவலை சரித்திர நூல்களில் எழுதியுள்ளார்கள். (வஃபாத்துக்குப் பின்) அல்லாஹ்வை சந்தித்த இமாம் முஹம்மது (ரஹ்) அவர்களை நோக்கி முஹம்மதே! உங்களது உள்ளத்தை எனது ஞானத்தை நிரப்புவதற்காக தேர்வு செய்து கொண்டேன். இப்போது மக்கள் முன்னிலையில் உங்களிடம் கணக்கு கேட்க எனக்கு வெட்கம் வருகிறது.

நான் உங்களது பாவங்களை நன்மைகளாக மாற்றி விட்டேன் என்று அல்லாஹ் கூறினானாம்.

இவ்வாறே மற்ற உலமாப் பெருமக்களை நோக்கியும் அல்லாஹ் கூறலாம்.

நான் உங்களது நெஞ்சங்களை இல்முக்காக தேர்ந்தேடுத்துக் கொண்டேன். இப்போது உங்களிடம் (அமல்களின்) கணக்கு கேட்க வெட்கம் வருகிறது! என்று கூறி கணக்கு கேட்காமலேயே அவர்களை சுவனம் அனுப்புவான்.

நிஸ்வானின் இந்த கோர்ஸை நிறைவு செய்துள்ள இப்பெண்களும் இத்தகு பாக்கியத்திற்கு சொந்தக்காரர்களாக ஆகலாம்.

பெண்ணைப் பெற்றவர்களும், உறவினர்களும், இவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியைகளும், ஏற்பாடு செய்த பிரின்சிபல்லும், மதரஸாவின் உதவியாளர்கள் அனைவரும் அல்லாஹ்வின் சமூகத்தில் பெரும் பாக்கியத்தை பெற்றவர்கள்.

இப்பெண்கள் தங்கள் இல்லங்களுக்கு சென்று வீட்டிற்குள் தீனின் அழைப்பு விடுக்க வேண்டும்.

சகோதரியாக இருந்தால் தன் சகோதரனுக்கு அழைப்பு கொடுக்க வேண்டும். மகள் தந்தைக்கும், மனைவி கணவனுக்கும், தாய் தன் குழந்தைகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.

நான் இவ்விஷயத்தை குர்ஆன், ஹதீஸ் ஒளியில் உங்கள் முன் தெளிவாக விளக்கி விட்டேன். கியாமத் நாளன்று உங்களிடம் இது பற்றியும் விசாரிக்கப்படும். அல்லாஹ் இப்பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற தவ்ஃபீக் செய்வானாக!

## 22. இறுதியாக ஒரு வார்த்தை

இறுதியாக ஓர் உதாரணத்தை நினைவுப் படுத்துகிறேன்.

உங்களை ஒருத்தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். வீட்டு ஜன்னலில் நின்று (வேடிக்கை) பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தெருவில் சில ரவுடிகள் ஒன்று சேர்ந்து உங்களது மகனை பிடித்து அங்கும் இங்குமாக இழுக்கிறான். ஓங்கி அடிக்கிறார்கள். அவனது தலையில் செருப்பால் அடிக்கிறார்கள். அவன் கழுத்தை நெறித்து

துண்டாக்குகிறார்கள். ஒரு தாய் என்ற ரீதியில் உங்களது மனம் எப்படி இருக்கும்? நிம்மதியாக உங்களால் நிற்க முடியுமா? இயலாது அழுவீர்கள்! கதறுவீர்கள்!ஓடுவீர்கள் என்மகன் மீது கைவைப்பவன் எவன்டா? என்று (ஆத்திரம் பொங்க) கூறுவீர்கள்.

அப்படியானால் கியாமத் நாளன்றும் தாய் நிற்பாள்! அவளது மகன் தொழாதவனாக அல்லாஹ்வுக்கு மாறு செய்தவனாக வட்டி சாப்பிடுபவனாக இருப்பான்.

(வட்டி சாப்பிடுபவன் குறித்து) ஹதீஸில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

வட்டி சாப்பிடுபவனை அல்லாஹ்வின் மலக்குகள் கழுத்தை நெறித்த வண்ணம் நரகத்திற்கு இழுத்து சென்று கொண்டிருக்க அதை அவளது தாய் பார்க்க நேரிடும். அத்தாயின் மனம் எப்படி இருக்கும்? என்று நினைத்துப்பாருங்கள்!

உங்களை ஒரு மனைவியாக நினைத்துப் பாருங்கள்! உங்கள் கணவரை சிலர் தடியால் தாக்குகிறார்கள். தூத்தில் இருந்து இதை நீங்கள் பார்த்துக் கொண்டுள்ளீர்கள். உங்கள் மனம் எப்படி பதை பதைக்கும்? கியாமத் நாளன்று மனைவி முன்னிலையில் கணவன் சம்மட்டியால் அடிக்கப்படுவார். அதை பார்க்கும் மனைவி மனம் எப்படி கதறும்?

நீங்கள் ஒரு சகோதரி. தெருவில் யாரோ ஒருவன் உங்களது (உடன் பிறந்த) சகோதரியின் துப்பட்டாவை உருவுகிறான். அவளது ஆடைகளை கிழிக்கிறான். உங்கள் சகோதரியின் ஆடைகளை உருவி கேவலப்படுத்தும் இக்காட்சியை நேரடியாக கண்ணால் பார்க்கும் உங்கள் மனம் இதைப் பொறுக்குமா?

(நாகரீகம் என்னும் பெயரில் பர்தாவைத் துறந்த பெண்மணிகள் குறித்து) ஹதீஸில் கூறப்பட்ட செய்திகள் இதோ...

இவ்வுலகில் பர்தா அணியாத பெண்மணி மறுமையில் அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தப்படுவாள். அவளது உடலிலிருந்து ஆடை தானாக கீழே விழுந்து விடும். அல்லாஹ்